முழுப் பதிப்புரிமையுடையது.

## இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2024 சனவரி

# (104) வணிகச் சூழல்

(Business Environment)

2024-02-18
பிற்பகல்
[02.00 – 5.00]

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  (1) ***காலம் :*** *03 மணித்தியாலங்கள்*
  (2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  (3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*
  (4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  (5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  (6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

**நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)**

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக..*

**1.1** கீழ்வருவனவற்றுள் தனியுடமை வியாபாரம் ஒன்றின் பிரதிகூலமாக அமைவது எது?

(1) ஆரம்பிக்க இலகுவானது.
(2) விரைவாக தீர்மானமெடுத்தல்.
(3) வரையறுக்கப்படாத பொறுப்பு.
(4) குறைந்தளவான சட்டங்களும் ஒழுங்குவிதிகளும்.

**1.2** கீழ்வருவனவற்றுள் நிறுவனமொன்றின் ஒரு பிரதான கூறாக (element) **அமையாதது** எது?

(1) மக்கள் குழு.
(2) பொதுவான நோக்கத்தைக் கொண்டிருத்தல்
(3) கட்டமைப்பு.
(4) எழுதப்பட்ட உடன்படிக்கையைக் கொண்டிருத்தல்

**1.3** பணச் சந்தை (Money Market) தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க:

(1) இது முற்றுமுழுதாக குறுங்கால நிதிக்கான ஒரு சந்தை ஆகும்.

(2) இதன் கொடுக்கல் வாங்கல்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

(3) பங்குகளும் தனிச்சங்களும் பணச் சந்தையின் பிரதான கருவிகள் ஆகும்.

(4) முதன்மைச் சந்தை மற்றும் இரண்டாம்நிலைச் சந்தை என இரண்டு உப பிரிவுகள் காணப்படுகின்றன.

**1.4** கீழ்வருவனவற்றுள் தொழில்முயற்சியாளர் தொடர்பில் சரியான கூற்று எது?

(1) அவர் வணிகத்தின் ஓர் ஊழியர் ஆவார்.

(2) அவர் பாரம்பரிய முறையில் சிந்திக்கிறார்.

(3) அவர் புதிய வணிக வாய்ப்புகளில் கவனஞ் செலுத்துகிறார்.

(4) அவரால் இடரை முகாமை செய்ய முடியாது.

**1.5** கீழ்வருவனவற்றுள் ஒரு வணிகத்தால் பயன்படுத்தப்படும் விநியோக வழிமுறைகளைத் தீர்மானிக்கும் காரணி எது?

(1) உற்பத்திப் பொருளின் தன்மை. (2) செலவு.

(3) தூரம். (4) மேற்கூறிய யாவும்.

**1.6** வணிக வங்கிகளிலுள்ள நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?

(1) வங்கிப் பணம். (2) அண்மைப் பணம். (3) மறைமுகப் பணம். (4) இலத்திரனில் பணம்.

**1.7** கீழ்வருவனவற்றுள் வர்த்தக வங்கி ஒன்றின் ஒரு தொழிற்பாடாக **அமையாதது** எது?

(1) நாணயத் தாள்களையும் குற்றிகளையும் விநியோகித்தல்.

(2) குத்தகை வசதிகளை வழங்குதல்.

(3) மேலதிகப்பற்று வசதிகளை வழங்குதல்.

(4) வைப்புகளை ஏற்றுக்கொள்ளல்.

**1.8** கீழ்வரும் கூற்றுகளைக் கருத்திற் கொள்க:

**(a)** நாட்டில் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல்.

**(b)** நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

**(c)** ஏற்றுமதிச் சந்தையிலுள்ள பிரதான பகுதியொன்றை பிரதிநிதித்துவப்படுத்தல்.

மேலுள்ளவற்றுள், SMEs இன் முக்கியத்துவங்களாவன:

(1) **(a)** யும் **(b)** யும் மாத்திரம். (2) **(a)** யும் **(c)** யும் மாத்திரம்.

(3) **(b)** யும் **(c)** யும் மாத்திரம். (4) மேற்கூறிய யாவும்.

**1.9** கீழ்வருவனவற்றுள் வணிகமொன்றின் பணிச் சூழலில் உள்ள ஒரு சக்தியாக **அமையாதது** எது?

(1) வாடிக்கையாளர்கள். (2) போட்டியாளர்கள்.

(3) பொருளாதாரச் சூழல். (4) வழங்குநர்கள்.

**1.10** கீழ்வருவனவற்றுள் சிறந்த போக்குவரத்து முறைமையின் ஒரு காரணியாக **அமையாதது** எது?

(1) வேகம். (2) அதிக செலவு. (3) கொள்ளளவு. (4) பாதுகாப்பு.

*கீழே இல **1.11** தொடக்கம் **1.15** வரையில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் ஒவ்வொன்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உங்களது விடைகளை (சரியானது / தவறானது) தரப்பட்டுள்ள விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.11** கூட்டு முயற்சி (joint venture) ஒன்றைப் பதிவு செய்வது அவசியமாகும்.

**1.12** நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்வது தொழில்முயற்சியாண்மை (entrepreneurship) ஆகும்.

**1.13** வேலையின் சமத்துவத்தைப் பாதுகாப்பது என்பது ஊழியர்களை நோக்கிய நிறுவன சமூகப் பொறுப்புக்காக (CSR) வணிகமொன்றால் எடுக்கப்படும் ஒரு நடவடிக்கையாகும்.

**1.14** கம்பனியின் பங்குகளை அல்லது தனிச்சங்களை வாங்குவதற்கு பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கின்ற ஒரு ஆவணம் பங்கு ஆணை (share warrant) எனப்படும்.

**1.15** திறன்கள் பற்றாக்குறை, நலிந்த முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர் பயிற்சி என்பன சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (SMEs.) எதிர்கொள்கின்ற சவால்களாகக் காணப்படுகின்றன.

*இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.16** பணத்தின் தொழிற்பாடு என்ற வகையில் "நியமப் பெறுமதி (Standard of Value)" என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.17** காப்புறுதியில் "உச்ச நன்நம்பிக்கை (Utmost good faith)" என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.18** பெண் தொழில்முயற்சியாண்மை (Women emtrepreneurship) எதிர்கொள்ளும் இரண்டு (02) சவால்களைக் குறிப்பிடுக.

**1.19** வணிக ஒழுக்கநெறிக் கோவையொன்றை உருவாக்கி, நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் இரண்டு (02) நன்மைகளைப் பட்டியலிடுக.

**1.20** கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் இரண்டு (02) தொழிற்பாடுகளைப் (functions) பட்டியலிடுக. (02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# <u>பகுதி B</u>

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

**சுனில்** மற்றும் **நிமால்** ஆகிய இருவரும் ஒலுகம என்ற இடத்தில் வசிக்கின்றனர். இது மாம்பழச் செய்கையில் வெற்றிகரமாக ஈடுபடும் ஒரு பிரதேசமாகும். **சுனிலும் நிமாலும்** மாம்பழ வியாபாரம் ஒன்றை ஆரம்பிக்க எதிர்பார்க்கின்றனர். அதற்கிணங்க, அவர்கள் ஒலுகம பிரதேசத்தில் மாம்பழங்களை வாங்கி மொத்தமாக விற்பனை செய்யும் நோக்கில் அவற்றை கொழும்புக்குக் கொண்டு வரவுள்ளனர். அவர்கள் இவ்வியாபாரத்தை **S & N என்டபிரைஸ்சஸ்** என்ற பெயரிலான ஒரு பங்குடமையாக நடத்திச் செல்வதற்குத் திட்டமிடுகின்றனர்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) பங்குடமை ஒன்றின் நான்கு (04) பண்புகளை (characteristics) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) பங்குடமை ஒன்றின் மூன்று (03) பிரதிகூலங்களைக் (disadvantages) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) பங்காளர் ஒருவரின் மூன்று (03) கடமைகளைக் (duties) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**ஸ்ரீதேவா** என்பவர் தலவாக்கலை பிரதேசத்தில் ஒரு சிறிய தேயிலைத் தொழிற்சாலையைக் கொள்வனவு செய்துள்ளார். அவர் இந்தத் தொழிற்சாலையை ஐரோப்பிய சந்தைக்கான ஒரு புதிய தேயிலை வகையை உற்பத்தி செய்வதற்கான இடமாக மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளார். இதற்காக அவர் இத்தொழிற்சாலையை ஏற்றுமதிச் சந்தைக்கான பல்வேறு சுவைகளுடன்கூடிய உயர் தர, உடனடித் தேயிலையை தயாரிக்கக்கூடிய முழுமையான தானியங்கி முறைத் தொழிற்சாலையாக மாற்றியுள்ளார். தனது வியாபாரத்தின் வளர்ச்சிக்கும் சீரான செயற்பாட்டிற்கும் ஒரு சிறந்த போக்குவரத்து முறைமை இருப்பது மிகவும் அவசியமானது என **ஸ்ரீதேவா** நம்புகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) ஐரோப்பிய தேயிலைச் சந்தைக்கு தேயிலையை ஏற்றுமதி செய்பவர் என்ற வகையில் **ஸ்ரீதேவா**வுக்கு சிறந்த போக்குவரத்து முறைமையொன்றின் இரண்டு (02) அனுகூலங்களை (advantages) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **ஸ்ரீதேவா** வணிகத்திற்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய மூன்று (03) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) வெளிநாட்டு வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் மூன்று (03) ஆவணங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**சுபோதா** என்பவர் இலங்கையிலுள்ள இறப்பர் தயாரிப்புக் கம்பனியான **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** பிரதம கணக்காளர் ஆவார். கம்பனிப் பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க, **சுபோதா** தமது தொழிற்சாலை ஊழியர்களுக்கான ஒரு சிறந்த காப்புறுதியைத் தேடுகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** தனது தொழிற்சாலை ஊழியர்களுக்கு காப்புறுதியைக் கொண்டிருப்பதன் மூலம் அது பெற்றுக் கொள்ளக்கூடிய இரண்டு (02) அனுகூலங்களை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) தொழிற்சாலை ஊழியர்களுக்கான காப்புறுதி தொடர்பான "காப்புறுத்தத்தக்க நாட்டம் (Insurable interest)" என்னும் பதத்தை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(c) காப்புறுதியை இடர் ஒன்றாக ஏற்றுக்கொள்வதற்கான மூன்று (03) தேர்வுநிபந்தனைகளை (criteria) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

விளையாட்டு உபகரணங்களை இறக்குமதி செய்கின்ற **சுமல் என்டபிரைஸ்** அதன் பிரதான கிளையை கொழும்பு பிரதான வீதியில் வைத்திருக்கிறது. இது மொத்த வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதுடன் அதன் வாடிக்கையாளர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருக்கின்றனர். இந்த வணிகத்தின் உரிமையாளரான **சுமல் மெண்டிஸ்,** வாடிக்கையாளர்களை தக்கவைத்துக் கொள்ளுகின்ற ஒரு உத்தியாக சில வாடிக்கையாளர்கள் கடன் அட்டைகள் மற்றும் காசோலைகள் ஊடாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு அனுமதித்துள்ளார். மேலும், அவர் தனது வங்கியுடன் இணைய வங்கியியல் வசதிக்காக பதிவு செய்வதற்கும் திட்டமிட்டுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) சிறந்த பணத்தின் நான்கு (04) பண்புகளைக் (characteristics) **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(b) (i) கடன் அட்டைகள் தவிர்ந்த இலத்திரனியல் பணத்திற்கான இரண்டு (02) உதாரணங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(ii) இணைய வங்கியியல் வசதியை பயன்படுத்தி ஆற்றப்படக்கூடிய இரண்டு (02) சேவைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) காசோலை ஒன்றின் நான்கு (04) கூறுகளைக் (elements) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

***வரையறுக்கப்பட்ட ஸ்ரீ மோட்டார் ஹவுஸ் (தனியார்) கம்பனி*** புதிய மற்றும் பயன்படுத்திய வாகனங்களை விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இது தனது கொழும்பு, களுத்துறை, கண்டி மற்றும் தெஹிவளை ஆகிய நான்கு கிளைகளில் கார் விற்பனை நிலையங்களை இயக்குகிறது. இவ்வியாபாரத்தை ***அத்துல சிறிவர்த்தன*** என்பவர் நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் ஒரு தனியுடமை வியாபாரமாக ஆரம்பித்திருந்தார். அந்த நேரத்தில், அவர் தெஹிவளை கார் விற்பனை நிலையத்தை மாத்திரமே வைத்திருந்தார். பின்னர், இவ்வியாபாரத்தின் பணிப்பாளர்களாக அவரது மனைவியையும் மகனையும் அவரையும் நியமித்து அதனை ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாக கூட்டிணைத்தார். அத்துடன், பல நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் மூலதனத்தைப் பெற்றுக்கொள்ள ***வரையறுக்கப்பட்ட ஸ்ரீ மோட்டார் ஹவுஸ் (தனியார்) கம்பனிக்கு*** இயலுமானதாக இருந்தது. மேலும், தமது வாடிக்கையாளர்களுக்கு குத்தகை வசதிகளை வழங்குவதற்காக இரண்டு குத்தகைக் கம்பனிகளுடன் அவர்கள் ஒப்பந்தங்கள் செய்து கொண்டனர்.

சமீபத்திய மூன்று ஆண்டு காலப்பகுதியில், கோவிட் 19 நோய்த்தொற்று, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இன்மையால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி ஆகியன காரணமாக பல்வேறு பிரச்சினைகளை அவர்கள் எதிர்கொண்டனர். சகல வாகன இறக்குமதிகளும் 2020 மார்ச் மாதத்தில் அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டன. இதன் விளைவாக நாட்டில் பயன்படுத்திய வாகனங்களின் கிரயம் 100% அல்லது அதற்கு மேற்பட்ட வீதத்தால் அதிகரித்திருந்தது. அதிகரித்த வாழ்க்கைச் செலவுடன், ***வரையறுக்கப்பட்ட ஸ்ரீ மோட்டார் ஹவுஸ் (தனியார்) கம்பனியின்*** கார் விற்பனையில் கடுமையான சரிவு ஏற்பட்டது. ***அத்துல*** தமது கடன் வசதிகளை மீள் அட்டவணைப்படுத்துவதற்கு நிதி நிறுவனங்களிடம் கோரிக்கையிட வேண்டியிருந்தது. எந்தவொரு கார் விற்பனை நிலையத்திலும் ‘‘விற்பனைகள் இடம்பெறவில்லை’’ என்ற காரணத்தால் அனைத்து கார் விற்பனை நிலையங்களிலும் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைத்ததுடன் மீதமுள்ள ஊழியர்களுக்கான சம்பளங்கள் ***அத்துலவின்*** தனிப்பட்ட சேமிப்பிலிருந்த பணத்திலிருந்து பல மாதங்கள் செலுத்தப்பட்டன.

ஓர் உயிர் பிழைத்தல் தந்திரோபாயமாக, கம்பனியின் ஒரு பணிப்பாளராக உள்ள ***அத்துல ஸ்ரீவர்த்தனவின்*** மகனான ***சானக,*** ‘‘வாகன மறு-வடிவமைப்பு’’ செய்யும் வியாபாரத்தை ஆரம்பிக்க யோசனை தெரிவித்தார். தமது வாகனத்தை மாற்ற விரும்புகின்ற ஆனால் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் காரணமாக புதிய வாகனத்திற்குச் செல்ல முடியாத மற்றும் / அல்லது பொருளாதார நெருக்கடி காரணமாக போதிய பணம் இல்லாத வாகன உரிமையாளர்களே அவர்களது இலக்காகும். சிறிய அளவிலான வாகன மீள்பொறியியலாக்கல் (re-engineering) கம்பனிகளுடன் தொடர்பு கொள்ளும் ***சானக***வின் ஆக்கபூர்வமான யோசனையின் (creative idea) மூலம் இந்த உயிர் பிழைத்தல் தந்திரோபாயமானது தேவையான திறன்கள், நிபுணத்துவம் மற்றும் தேவையான உதிரிப்பாகங்கள் மற்றும் பாகங்களை எளிதாக அணுகுவதற்கு அவர்களுக்கு உதவியது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) ***வரையறுக்கப்பட்ட ஸ்ரீ மோட்டார் ஹவுஸ் (தனியார்) கம்பனி*** ஒரு கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக அனுபவிக்கக்கூடிய நான்கு (04) சாத்தியமான அனுகூலங்களை ***இனங்காண்க.*** (04 புள்ளிகள்)

(b) PESTEL பகுப்பாய்வைப் பயன்படுத்தி ***வரையறுக்கப்பட்ட ஸ்ரீ மோட்டார் ஹவுஸ் (தனியார்) கம்பனி*** இன் வணிகச் சூழலை ***மதிப்பிடுக.*** (06 புள்ளிகள்)

(c) நிறுவனமொன்று நாட்டதாரர்களுக்கான (stakeholders) அதன் பொறுப்பினை ஏன் நிறைவேற்ற வேண்டும் என்பதற்கான மூன்று (03) காரணங்களைக் ***குறிப்பிடுக.*** (03 புள்ளிகள்)

(d) வணிகங்களில் அரசாங்கம் செல்வாக்குச் செலுத்தும் மூன்று (03) வழிகளைக் ***குறிப்பிடுக.*** (03 புள்ளிகள்)

(e) “படைப்பாற்றல் (creativity)’’ ஆனது ***வரையறுக்கப்பட்ட ஸ்ரீ மோட்டார் ஹவுஸ் (தனியார்) கம்பனியின்*** வியாபார வெற்றிக்கு எவ்வாறு உதவுமென ***விபரிக்குக.*** (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |